PERSONAL CLASSES
B. M. C. FRONT LANE, JAFFNA.
A/L 89, 90 & 91
வகுப்புகள் நடைபெறுகின்றன.
PHY. சத்தியசீலன்
CHE. மதுரமணி
BOT. சர்வானந்தன்
ZOO. சல்வரதாசன்
PURE. APP. } விஜயகுமார்

பக்கங்கள்: ஆறு

ADVTishment - 24

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ 2/50

A/L 91
பிரிவு II
ஆரம்பமாகவுள்ளது

A/L 89
மாணவர்களுக்கு
வகுப்புகள் ஆரம்பமானதும்
பயிற்சிப் பரீட்சைகள்
நடைபெறும்.
PERSONAL CLASSES
B. M. C. FRONT LANE, JAFFNA.

சுடர்: 14 சுக்கில ஞூ ஆவணி மீ 20உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 4 (05 - 09 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY ஒளி: 235

# பாடசாலைக்கு செல்லுமாறு கூட்டாக வேண்டுகோள்!

## ஈ. என். டி. எல். எவ்., ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ். ஆகியவை இணைந்து விடுத்துள்ள அறிக்கை

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 5

ஈழதேசத்தில் உள்ள சகல மாணவர்களையும் பாடசாலைகளுக்குச் சென்று தமது கல்வியைத் தொடருமாறு கூட்டாக வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி மக்கள் தொடர்பகத்தில் இருந்து ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி, ரெலோ, ஈ. பி. ஆர் எல். எவ் ஆகிய அமைப்புக்கள் இணைந்து "எமது கையே எமது கண்ணைக் குத்திடுமோ?" என்னும் தலைப்பில் விடுத்த அறிக்கையிலேயே இப்படிக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது பாச பூமியான ஈழத் தேசத்தில் உள்ள சகல பாடசாலைகளும் 14-8-89 அன்று தொடக்கம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நாம் மாணவர்களைக் கைது செய்கின்றோம் என்ற விசமத்தனமான பிரசாரம் கள் நம்பியதன் காரணமாகவே பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிகக் குறைவாக உள்ளதாக அறிகின்றோம். இந் நிலையில் மாணவர்கள், பெற்றோர்கள் ஆகிய உங்களுக்கு எமது நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்த வேண்டிய கடமை எம் முன் உள்ளது.

★ மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நாம் ஒருபோதும் எதிரானவர்கள் அல்லர். எமது தேசத்தின் கல்வி வளர்ச்சிக்கான அடிப்படையிலேயே எமது ஈழப் போராட்டம் பரிணாமம் பெற்றது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

★ மாணவர்கள் என்ற வரையறைக்குட்பட்ட வரையில் அவர்களை நாம் இடையூறு செய்யவோ அல்லது

(6ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



மீண்டும் தர்மிஷ்டரா......? ராகு, கேது மாற்றம் சரியாத்தான் வேலை செய்யுது பாருங்கோ......!

# எதிர்க் கட்சிகள் இன்று ஜே. ஆருடன் ஆலோசனை!

கொழும்பு, செப். 5

எதிர்க் கட்சிகளின் நாடாளுமன்றக் கூட்டு முன்னணி இன்று செவ்வாய்க்கிழமை முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளது.

இச்சந்திப்பின்போது 13ஆம் திகதி நடைபெறவுள்ள அனைத்துக் கட்சி மாநாடு தொடர்பாக ஆலோசனை நடத்தப்படவுள்ளதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

திரு. ஜெயவர்த்தனாவைச் சந்திக்கவுள்ள எதிர்க் கட்சிகளின் முன்னணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ. பி. ஆர். எல். எவ்., ஐக்கிய சோஷலிச அணி ஆகிய கட்சிகள் உள்ளன.

இதேவேளை அனைத்துக் கட்சி மாநாட்டில் முன்வைக்கவுள்ள யோசனைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து எதிர்க் கட்சிகளின் நாடாளுமன்றக் கூட்டு முன்னணி நேற்றுமுன் தினம் கூடி ஆராய்ந்தது.

மாநாட்டில் கலந்து கொள்ளும்படி கோரும் ஜனாதிபதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## கண்டியில் ஒரே நேரத்தில் பல இடங்களில் தாக்குதல்!

கொழும்பு, செப் 5

கண்டி மாவட்டத்தில் இராணுவ மத்தியபிரிவு காவல் நிலையம் மற்றும் கலகெதர சடுகண்ணாவை, பன்வில ஆகிய பொலீஸ் நிலையங்கள் மீது தீவிரவாதிகள் நேற்று ஒரே சமயத்தில் தாக்குதல்களை மேற்கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல்களை படையினர் முறியடித்ததாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

மத்தியபிரிவு காவல் நிலையத்தாக்குதலில் ஒரு சந்தேக நபர் கொல்லப்பட்டார்.

இன்னொரு சம்பவத்தில் சிறையில் இருந்த தீவிரவாத நபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இன்னொருவர் கைது செய்யப்பட்டார்.

தீவிரவாத சந்தேக நபர் ஒருவர் காயங்களுடன் மகாவலி கங்கைக்குள் பாய்ந்து தப்பிச் செல்ல முயலுகையில் கைது செய்யப்பட்டார்.

திருகோணமலையில் அபயபுர என்னுமிடத்தில் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதலின் போது ஒரு தீவிரவாதி உயிரிழந்தார்.

இதே வேளை நேற்று முற்றுக்கும் அதிகமான சந்தேக நபர்களை பாதுகாப்புப் படையினர் கைது செய்ததாக அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## அமெரிக்க அதிகாரியுடன் ஜனாதிபதி பிரேமா பேச்சு!

கொழும்பு, செப். 5

அமெரிக்க செனட்சபையில் வெளியுறவுக் குழுவின் பிரதம ஆலோசகர் திரு. கோல்பிரெய்த் ஜனாதிபதி பிரேமதாஸாவை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

நாட்டின் தற்போதைய நிலைமை பற்றி திரு. பிரேமதாஸா அமெரிக்க அதிகாரிக்கு எடுத்துரைத்தார்.

தனக்குத் தெரிவிக்கப்பட்ட விஷயங்களை அமெரிக்க வெளியுறவுக் குழுவுக்குத் தான் எடுத்துக் கூறவிருப்பதாக அமெரிக்க அதிகாரி சொன்னார். (உ-எ)

## 21 சடலங்கள் நேற்று மீட்பு

கொழும்பு, செப். 5

தென் பகுதியின் பல பகுதிகளிலும் நேற்று மட்டும் 21 சடலங்கள் மீட்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன. (ஒ-1)

## உணவுத் திணைக்களம் ஜனவரியில் மூடப்படும்?

கொழும்பு, செப். 5

உணவுத் திணைக்களம் எதிர்வரும் ஜனவரி மாதத்துடன் மூடப்படக்கூடிய சாத்தியக்கூறு உருவாகியுள்ளது.

உணவுத் திணைக்களத்தை மூடி உணவு விநியோகத்தை கூட்டுறவு மொத்த விற்பனவு (சி. டபிள்யூ. ஈ.) ஸ்தாபனத்திடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அறிய வருகிறது.

முதல் கட்டமாக உணவுப் பொருள் இறக்குமதி கூ. மொ. வி. யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உணவுத் திணைக்களத்திடம் தற்சமயம் இருப்பில் உள்ள பொருள்களை விற்பனை செய்து திறைசேரிக்குப் பணம் கட்டவேண்டிய நிலையிலும் ஏற்பட்டிருக்கிறது.

இந்த அடிப்படையிலேயே உணவுத் திணைக்களம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் அடிப்படையில் பொருள் வழங்குவதை நிறுத்தியதாகத் தெரியவந்துள்ளது.

இதே நேரம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல கோடி ரூபா பணத்தை உணவுத் திணைக்களத்துக்கு வழங்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-8)

## மேற்றிராணியார் காலமானார்

கொழும்பு, செப். 5

சிலாபம் மறைமாவட்ட முன்னாள் மேற்றிராணியார் வணக்கத்துக்குரிய எட்மண்ட் பீரிஸ் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 91. (ஒ-எ)

## இன்று முதல் மட்டுநகர் சேவை

யாழ்ப்பாணம், செப். 5

வடபிராந்திய போக்குவரத்துச்சபை இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு, கண்டி ஆகிய இடங்களுக்கான பஸ்சேவையை மீண்டும் இன்று ஆரம்பிக்க உள்ளது. (உ-9)

# அமைதிப்படை விடுக்கும் உத்தரவை அரச அதிபர்கள் ஏற்கத் தேவையில்லை!

## வடக்கு, கிழக்கு அதிகாரிகளுக்கு அரசு சுற்றுநிருபம்

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, செப். 5

சிவில் நிர்வாக விடயங்களில் இந்திய அமைதிப்படையினர் விடுக்கும் உத்தரவை அரச அதிபர்கள், உதவி அரச அதிபர்கள் கவனத்தில் கொள்ளத் தேவையில்லை; கவனத்தில் எடுக்கவும் கூடாது.

இவ்வாறு வலியுறுத்தி வடக்கு, கிழக்கில் உள்ள அரச அதிபர்கள், உதவி அரச அதிபர்கள் ஆகியோருக்கு அரசாங்கம் சுற்றுநிருபம் அனுப்பியிருக்கிறது.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபை விடயங்கள் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைச்சுக்களின் செயலாளர் திரு. சிறில் கமகே இந்தச் சுற்றுநிருபத்தை அனுப்பி வைத்திருப்பதாக நேற்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

குடிவரவு, குடியகல்வு மற்றும் சுங்கம் சம்பந்தப்பட்ட விடயங்களில் இந்திய அமைதிப்படையின் தலையீடு ஏதும் இருப்பின் அது பற்றி உடனடியாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும் என்றும் இந்தச் சுற்றுநிருபத்தில் அரச அதிபர்களுக்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறதாம்.

இதேவேளை, அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் வடக்கு, கிழக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் மற்றும் காலி, கொழும்பு ஆகிய மாவட்டங்களிலும் குடிவரவு, குடியகல்வு மற்றும் சுங்கத் திணைக்கள நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொறுப்பு பாதுகாப்புப்படை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இந்திய உதவிப்பொருள்களுடன் வடக்கு, கிழக்கிற்கு வரும் இந்தியக் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் வேலை இலங்கை அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் நடைபெற வேண்டும் என இலங்கை அரசு விரும்புவதையே இது காட்டுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-1)

## வடமராட்சி கிழக்கில் தேடுதல்!

வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் அடிக்கடி சுற்றிவளைப்பு தேடுதல்கள் இடம்பெறுகின்றன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை டாங்கிகள் சகிதம் சென்ற படையினர் மணற்காடு குடத்தனை வடக்கு, பொற்பதி ஆகிய கிராமங்களைச் சுற்றி வளைத்தனர். சிலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதேதினம் அம்பன் கிராமமும் சுற்றி வளைக்கப்பட்டது. (ஒ-118)

## போட்டோஸ்ரட் மெஷின் பழுது: பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் வழங்குவதில் தாமதம்!

யாழ்ப்பாணம், செப் 5

யாழ் செயலகத்தில் பிறப்பு இறப்புச் சான்றிதழ்களை பிரதி எடுக்கும் 'போட்டோ ஸ்ரட்' மெஷின் பழுதடைந்துள்ளதால் வேலைகள் தாமதம் அடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இதனால் அவசரத் தேவை நிமித்தம் பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பித்தவர்கள் பாதிப்படைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

'போட்டோஸ்ரட்' மெஷின் விரைவாக திருத்தப்பட்டால் சான்றிதழ்களை கூடிய கெதியில் வழங்கி முடிக்கலாம் என்றும் கூறப்பட்டது. (ஒ-8)

சுபநேரம்
(05 - 9 - 1989)
ஆவணி 20 செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: சுவாதி
சுபநேரம்:
10-34 முதல் 12-04 வரை
ராகுகாலம்:
03-04 முதல் 04-34 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## 'மகாபொல' கொடுப்பனவை பல்கலைக்கழகம் வழங்கும்!

யாழ்ப்பாணம், செப். 5

யாழ் பல்கலைக்கழகத்தில் 'மகாபொல' புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களின் கொடுப்பனவுகளை பல்கலைக்கழக பணத்தில் இருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ் பல்கலைக்கழகத்தில் இவ்வருடம் அனுமதி பெற்றவர்களில் 400 மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

மகாபொல கொண்டாட்டம் இவ்வருடம் இதுவரை நடைபெறாததால், இம்மாணவர்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இரண்டாம் தவணை ஆரம்பிக்கப்பட்டும், கொடுப்பனவுப் பணம் வந்து சேராததால் பல்கலைக்கழக மாணவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகக் கூறப்பட்டது. (ஒ-3)

## திருமலை துறைமுகத்துக்கு உதவிப் பொருள்களுடன் இந்தியக் கப்பல் வருகிறது

புனர் வாழ்வுக்கான உதவிப் பொருட்களுடன் வரும் இந்திய அரசு அனுப்பும் கப்பல் எதிர்வரும் 8 ஆம் திகதி திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடையும் என்று இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பலில் ஒரு கோடி ரூபா பெறுமதியான அச்சு இயந்திரங்கள், 200 பஸ்கள், 10 மகேந்திரா ஜீப்கள், பாடசாலை மாணவர்களுக்கான உடுபுடைவைகள், கண்ணாடி இழையிலான வள்ளங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் ஆகியன கொண்டுவரப்படவுள்ளன.

இந்த உதவி பற்றி இந்திய அரசு இலங்கைக்கு தெரியப்படுத்தி இருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(மற்றொரு செய்தி 4ஆம் பக்கத்தில்)

## அனைத்துக்கட்சி மாநாடு: காபந்து அரசு பற்றியே முதலில் பேச வேண்டும்!

கொழும்பு, செப். 5

"அனைத்துக்கட்சி மாநாட்டிற்கு முன்னர் காபந்து அரசு ஒன்றை அமைப்பது குறித்து முடிவு எடுக்கப்படவேண்டும்.

இது சம்பந்தமாக அரசின் பதில் கிடைத்த பின்னரே அனைத்துக்கட்சி மாநாட்டில் பங்குபற்றுவது பற்றி நாம் முடிவு எடுப்போம்".

-இவ்வாறு ஐந்து எதிர்க் கட்சிகள் கூட்டாக நிபந்தனை விதித்திருக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஈ. பி. ஆர். எல். எவ். ஐக்கிய சோசலிச அணி மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவையே இந்த நிபந்தனையை விதித்திருக்கின்றன.

இந்த ஐந்து கட்சிகளும் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கு நேற்று அனுப்பி

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதா-வீரப்பன் இடையில் மீண்டும் லடாய்?

சென்னை, செப். 5

செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. கவில் சேர்ந்து இணைப்பொதுச்செயலாளர் பதவியைப் பெற்றுக் கொண்ட திரு. இராம வீரப்பன் கட்சியில் மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டார்.

ஐந்து துணைப்பொதுச்செயலாளர்களில் ஒருவரான திரு. எஸ். டி. சோமசுந்தரத்தை

(6ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரல்

### விற்பனை

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books), அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer-Books), கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்: மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம்: (1551)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஹைலைன் (Hyline) இவப்பு கறுப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் (பிளிமத்) கறுப்பு சேவல் சிவப்புச் சேவல் ஆகியன 7-9-89 வியாழக்கிழமை விநியோகிக்கப்படும்: அத்துடன் சகல தடுப்பூசி வசதிகள் செய்து கொடுக்கப்படும்: முன் கூட்டியே பதிவு செய்ச தொடர்பு: S.T R அன்சன்ஸ் மால்கடை, திருநெல்வேலிச் சந்தி: (2021)

Golden comet பிறவுன் பேட்டுக் குஞ்சுகள் பிறவுன் சேவற் குஞ்சுகள் 6ஆந்திகதி புதன்கிழமையும் cristombu farm புரொயிலர் குஞ்சுகள் 7ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும்: முன் கூட்டியே பதிவு செய்க: சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில்: (2084)

### கோழிக்குஞ்சு விநியோகம் )UPLANDS FARM)

(DEKALB) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், (COBB) புரொயிலர் குஞ்சுகள் 5-9-89 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும்: முன்கூட்டியே பதிவு செய்க: இல: 9 சந்தையாலேன், சுன்னாகம்: [புகையிரத நிலையத்துக்கு அருகில்) [1888]

### மயூரதி கணித வெளியீடுகள்

10 வருடங்களுக்கு மேலாக கணித நூலாக்கத்தில் அனுபவமுடைய ஆசிரியர் வி. சச்சிதானந்தனின் ஆக்கங்கள்தான் மயூரதி வெளியீடுகளாகும்: G. C. E. (O/L) மாதிரி வினாத்தாள்கள் ரூபா 13.75, ரூபா 17.50. கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, ஞானசுரபி, துர்க்கா ஸ்ரேசனர்ஸ். [1390]

### தேவை

கடையில் வேலை செய்வதற்கு பெண் விற்பனையாளர் தேவை: நேரில் தொடர்பு கொள்ளவும்: 144, இராமநாதன் றோட், யாழ்ப்பாணம் (Campus பெண்கள் விடுதிக்கு முன்) [2040]

### உடன் தேவை

யாழ் நகரில் மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவருக்கு சிறபிள்ளையைப் பராமரிக்க ஒருவர் உடன் தேவை. வயதெல்லை 12 முதல் 35 வரை: தங்குமிட வசதி, உணவு, சம்பளம் வழங்கப்படும்: தொடர்பு: 594, C/o உதயன் (2049)

### மணமகன் தேவை

யாழ். உயர்சைவ வேளாள குலத்தைச் சேர்ந்த 34 வயதுடைய விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியைக்கு இவரின் தராதரத்திற்கு அமைவான உத்தியோகஸ்தர் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ தேவை: தொடர்பு: ஆர். பி. ரி. அன்ட்மா, 21 கண்டிவீதி [கோட்டடி) சாவகச்சேரி. (1875)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 89/17, மின்சார நிலைய வீதி, 8 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்: (சி 3601)

### SPOKEN ENGLISH

30 தொடர் வகுப்புகள் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில்: நேரம் பகல் 10 - 11. 30மணி ஆரம்பம்: 11- 9- 89 முன்பதிவு செய்தல் வேண்டும்: S. B. Iyar, 12 வைமன் வீதி, நல்லூர்: (1898)

### செங்கமாரி

சிறுநீர் மஞ்சலாகவோ, சிவந்தோ போனால் செங்கமாரி சரளைப் பார்க்கும்: எந்நிலையிலும் குணப்படுத்தலாம்: வாதம், வலி, குன்மம், குதக வாயு, சிரங்கு. காமாலை நோய்களிலும் திறமைபெற்றவர் வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம். வேலணை: (1845)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்

## ஜெறோம் அருள் ஷைலேந்திரா

அன்னையின் மடியில்: 06 - 01 - 1981

ஆண்டவன் அணைப்பில்: 05 - 06 - 1989

அன்பு மகனே ஆசை ஷைலே
திங்கள் மூன்று சென்றதையா
இனிய செல்வமே நீ எங்கு சென்றாய்!
தோல்பை தோளிற் சுமந்து கொண்டு
சிரித்த முகமாய்
பள்ளி சென்ற பாத அடிகள் இன்னமும்
அழியாத கோலமடா!
நிமிர்ந்து செல்கின்ற உன் குறுநடையும்
புன்னகை பொலியுமுன் மதிமுகமும் - எம்
உள்ளத்தில் நீங்காத நினைவுகளடா!
உந்தன் சுடர் ஒளிக் கண்களையும்
ஆராய்ந்தறியத் துடிக்கும் கைகளையும்
நினைக்கும் போது உள்ளம் வெடிக்குதடா!
நித்தம் கண்ணீரை விழிதனிலே நிறைத்து விட்டு
துலங்குகின்ற ஜோதியாய்
ஒளியேற்ற விண்ணுலகம் சென்றாயோ!

உன்னை தினம்: தினம் நினைத்து தவிக்கும்

அன்பு அம்மா, அக்கா, தம்பி, உற்றார், உறவினர்கள்:

அயித்தாம்புலம்,
சரம்பன் மேற்கு,
ஊர்காவற்றுறை:

[1895]

## ஏழாம் மாத நினைவஞ்சலி



## கந்தசாமி சண்முகசுந்தரம்

அன்னையின் மடியில்: 8 - 02 - 1945

காலனின் பிடியில்: 05 - 02 - 1989

சபதஞ் செய்யாதே. உண்மையே பேசு. சமத்துவத்தை நிலைநாட்டு. எளிய வாழ்வு வாழ் என்று அறிவுரைகள் சொன்ன நீங்களெங்கே? எத்தனை மாதங்கள் உருண்டோடினாலும் உங்கள் அன்புருவம் எம் நெஞ்சங்களை விட்டு அகலாது:

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்:

உடன் பிறவாச் சகோதரி,
மனைவி, பிள்ளைகள்

நவாலி வடக்கு,
மானிப்பாய்:

(2915)

## பாடசாலை மாணவருக்கு விஞ்ஞான கட்டுரைப்போட்டி

### "விஞ்ஞான முரசு" சஞ்சிகையின் ஏற்பாடு

கொழும்பு, செப்: 5

'விஞ்ஞானமுரசு' சஞ்சிகை பாடசாலை மாணவருக்கான விஞ்ஞான கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்துகிறது.

இந்தப் போட்டியில் சகல அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களும் பங்குபற்றலாம்:

கட்டுரை விஞ்ஞானத்தின் எந்த ஒரு பிரிவைப் பற்றியதாகவும் அமையலாம்

'புல்ஸ்காப்' தாளில் சுமார் 8 பக்கங்களைக் கொண்டதாக எழுதப்படவேண்டிய இந்த கட்டுரைக்கு மாணவர்களே தலைப்பையும் இடவேண்டும்:

ஒவ்வொரு பாடசாலையும் சிறந்த மூன்று கட்டுரைகளை அனுப்பலாம்:

அவை மாணவரின் சொந்த முயற்சி என்றும் அம்மாணவர் அந்தப்பாடசாலையில் கல்வி பயில்கிறார் என்றும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

இந்த கட்டுரைகள் அக்டோபர்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'விஞ்ஞான முரசு' இலங்கை விஞ்ஞான முன்னேற்றச்சங்கம் 120/10 விஜேராம மாவத்தை கொழும்பு7 எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்:

இத்தகவல்களை விஞ்ஞான முன்னேற்றச் சங்க செயலாளர் திரு. என் ஐ. எஸ். நடராசா தெரிவித்தார்:

'விஞ்ஞான முரசு' சஞ்சிகை இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்க விஞ்ஞான பரப்புக் குழுவினால் வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கது: (த- 7)

### விசர்நாய்க்கடி தடுப்பு ஊசி

## ஏ. ஆர். வி. மருந்து வவுனியாவிலும் இல்லை

வவுனியா அரசினர் ஆஸ்பத்திரியில் நிலவி வரும் விசர் நாய்க்கடிக்கான நோய்த்தடுப்பூசி (ஏ. ஆர். வி) மருந்துத் தட்டுப்பாடு காரணமாக நாய்க்கடிக்கு ஆளாகி வரும் நோயாளிகள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல நேரிட்டுள்ளது.

விசர்நாய்க்கடிக்குரிய வைத்தியம் பெற்று வந்த சுமார் தொண்ணூறு நோயாளிகள் தாங்கள் பெற்று வந்த ஊசி மருந்தைத் தொடர்ந்தும் பெற முடியாத பரிதாப நிலை தோன்றியுள்ளது:

இதனிடையில் கடந்த ஒரு மாத காலமாக வவுனியா மாவட்டம் மட்டுமன்றி மன்னார் முல்லைத்தீவு போன்ற அயல் மாவட்டங்களிலிருந்தும் சராசரி சுமார் 5 பேர் விசர்நாய்க்கடிக்கு ஆளாகி வைத்தியத்திற்காக வருவதாக வவுனியா ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளையில் விசர்நாய்க்கடிக்குரிய மருந்தைப் பெறுவதற்கான கோரிக்கைகளை அனுப்பியதுடன் அதனை நேரடியாகப் பெற்றுவருவதற்கு ஊழியர்களைக் கொழும்பிற்கு அனுப்பிய போதிலும் அங்குள்ள மருந்து களஞ்சியங்களிலிருந்துகொடுக்கப்படுவதில்லை எனவும் தெரிகிறது:

இதனால் விசர்நாய்க்கடிக்கு ஆளாகியபலரும் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது: (த-164)

## முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி

இலங்கை - இந்திய பேச்சுவார்த்தைகளின் பிரகாரம் வடக்கு-கிழக்குமாகாணத்தில் அமையவிருக்கும் சமாதான சபையில் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியும் இடம் கோரும். (க-21)

### நல்லூர் முருகன் சனசமூக நிலைய கட்டிட நிதிக்கான

## அதிஷ்ட இலாபச் சீட்டு முடிவுகள்

01 — 09 — 1989

★ முதலாம் பரிசு 1893
★ இரண்டாம் பரிசு 2423
★ மூன்றாம் பரிசு 2276
★ ஆறுதல் பரிசுகள் 203, 2442, 2883, 2929 738, 1764, 1653, 2229, 1262, 2019.

க. இராஜேந்திரா,
செயலாளர்:

67, செட்டித்தெரு,
நல்லூர்:

[2101]

## விலைக் கூறுகள் கோருதல்

### நீர்பாசனத் திணைக்களம் - வவுனிக்குளப் பிரிவு

கீழ்க்காணும் வேலைக்கு 21 - 09 - 89 மு. ப 10.00 மணிவரை விலைக்கூறுகள் கோரப்படுகின்றன

1. வவுனிக்குள அணைக்கட்டிற்கு பாதுகாப்பு நடவடிக்கை:

உரிய பத்திரங்கள் எனது பணியகத்தில் 31 - 08 - 89 முதல் 20 - 09 - 89 வரை மு. ப. 9.00 மணிதொடக்கம் பி. ப. 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு இப்பணியகத்துடன் தொடர்பு கொள்ளவும்:

எந்திரி அ. கி. விநோதராஜ்,
நீ. பொ. வவுனிக்குளம்.

நீர்ப்பாசனப் பணியகம்,
வவுனிக்குளம்:
1989 - 08 - 30

[சி 3319]


## ★ COMPUTER COURSES ★

### DIPLOMA IN BASIC PROGRAMMING

புதிய பிரிவுகள்: 08 - 09 - 1989 (பிரிவு - I)
15 - 09 - 1989 (பிரிவு - II)

நேரம் 9—00 a.m. இல் ஆரம்பமாகும்

I.D.P. COMPUTER CENTRE

342, K K S. ROAD, JAFFNA.

Branch: 7th mile post MALLAKAM

(C/3618)


## 92ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## செல்வன் ஏ. விஜயமூர்த்தி

(ராஜன் - விசு)

மண்ணில் மலர்வு: 25 — 10 — 1970

மண்ணில் உதிர்வு: 06 — 06 — 1989

எம் இனிய ராஜனே!

நீ எம்மை விட்டுப் பிரிந்து 3 மாதங்கள் ஓடிவிட்டாலும் உன் இனிய நினைவுகள் எம் நெஞ்சங்களில் நிழலாடிக் கொண்டிருக்கின்றன.


உன் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்,

உன் அன்பு அம்மா, அப்பா, அண்ணாமார், அக்காமார், அன்ரிமார், மாமாமார், மாமிமார், அம்மம்மா, உற்றார், உறவினர்கள்,

பருத்தித்துறை.
04-08-89

[1750]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. கந்தையா தம்பிராசா

(சமாதான நீதவான், ஓய்வு பெற்ற அதிபர்)

மலர்வு: 18 — 04 — 1928

உதிர்வு: 09 — 09 — 1986

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து பொது நலச் சேவைக்கே தன்னை அர்ப்பணித்த அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

அன்பு மனைவி, உறவினர்கள்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

[2022]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வி கிரிசாந்தி இராஜலிங்கம்

மலர்வு: 22 - 12 - 1971

உதிர்வு: 05 - 09 - 1988

அன்பின் பிறப்பிடமாய், பண்பின் சிகரமாய், பாசத்துடன் வாழ்ந்து, எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எம் செல்வமே! உமது ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல சந்நிதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்;

அப்பா, அம்மா,
அண்ணா, தங்கை, தம்பி.

வராம்பற்றை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்:

(1897)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

**பொருள்:**

உழவு செய்ய முடியாமல் உயிர் வாழ்கின்றவர் எல்லாரையும் தாங்குவதால், உழவு செய்கின்றவர் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்.


# உதயன்

இல: 392/2, நாவலர் வீதி, தொலைபேசி: 24805
யாழ்ப்பாணம்: 22073
05 - 09 - 1989 பெ: இலவு 33


## தண்ணீரைத் தாக்காதீர்!

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர் வளம் குறித்துப் பல தடவைகள் எச்சரிக்கைகள் வந்ததுண்டு; ஆனால் எச்சரிக்கைகளைக் கருத்திற் கொண்டு தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இங்கு வந்த இங்கிலேலிய நிபுணர் குழு ஒன்று கால் நூற்றாண்டு காலத்தில் (அதாவது கணக்குப்படி இப்போது) குடாநாடு பாலைவனமாகிவிடும் ஆபத்து உண்டு என்று எச்சரித்தது; ஆனால் இயற்கையின் அருளால் அந்த ஆபத்து இன்னும் அணுகவில்லை.

அதற்காக அவர்கள் தெரிவித்த எச்சரிக்கை பொய்யானது என்று அசட்டை செய்துவிட முடியாது; நிலத்தினடி நீரையே, அதற்கு ஆதாரமாக மழை நீரையே, நம்பி இருக்கும் குடாநாட்டில் அடிக்கடி வானம் பொய்த்து வருவதைக் காண்கிறோம். உரிய பருவத்திலும் மழை இல்லை; பருவம் நீங்கிய காலத்திலும் மழை இல்லை என்ற வரட்சி வாட்டி வதைக்கிறது. வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி குறைந்து செல்வதையே காணமுடிகிறது.

நீர்வளம் குன்றிப் போகும் என்ற எச்சரிக்கை ஒரு புறமிருக்க, குடாநாட்டின் நிலத்தினடி நீர் முழுக்க உவராகிவிடும் ஆபத்துக் குறித்தும் எச்சரிக்கப்படுகிறது; இவ்வெச்சரிக்கை பல ஆய்வுகள், அறிக்கைகளில், பல தரப்பாரிடமிருந்தும், பல தடவைகள் வந்துள்ளது; எனினும் நீர் மாசடைதலைத் தடுக்க, உவராதலைத் தடுக்க தற்காப்பு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதில்லை; அதில் நாட்டம் கொண்டதாகவும் இல்லை; அக்கறை கொண்டு எவரும் முன்வந்து செயற்பட்டதுமில்லை.

நீர்வளத்தைப் பேணுவதிலும், அது மாசடைவதைத் தடுப்பதிலும் அக்கறையுடன் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக மேலும் நிலைமையைச் சீர்கெடுக்கும் விதத்தில் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன; கட்டுப்பாடு இல்லாமல் தண்ணீர்த் தாய் தாக்கப்படுகிறாள்! இரக்கம் இன்றி அவள் தீண்டப்படுகிறாள்!!

விவசாயத்துக்காக மிதமிஞ்சிய அளவில் நீர் வளம் சுரண்டப்படுகிறது; அளவுக்கு மீறிய செயற்கை உரப் பாவனையால் நீரின் நைதரசன் விகிதாசாரம் அதிகரிக்கிறது. பல கொடிய நோய்களுக்கு எமது மக்கள் அருந்தும் தண்ணீரே மூலகாரணமாகும் விதத்தில் மாசுபடுத்தம் செய்யப்படுகிறது.

விலங்கு, மனிதக்கழிவுகள் அதிக அளவில் தண்ணீரில் சேர்வதால் அதன் பக்றீரியா விகிதாசாரமும் மிக அதிகமாகிறது. இதுவும் கொடிய நோய்களுக்கு வித்திடுவதோடு தண்ணீரை உவராக்கவும் செய்கிறது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நீரியல் ஆய்வுகள் இந்தத் தரவுகளைத் தெளிவுபடுத்துகின்றன; இனியும் இது தொடர அனுமதித்தால் குடாநாட்டுத் தண்ணீர் முற்றாக உவராகிவிடும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தாவரவியற்றுறைத் தலைவர் பேராசிரியர் தெய்வேந்திரராஜா எச்சரித்திருக்கிறார்.

மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டமையால் குடாநாட்டின் தண்ணீர் உவராகும் ஆபத்து உண்டு என்ற சாதாரண காரணத்தைக்கூட இப்பகுதி மக்கள் கவனத்தில் கொள்ளத் தவறினார்கள்; தவறி வருகிறார்கள். நீர்வளத்தைக் கெடுக்கவும், மாசுபடுத்தவும் எதை எதை எல்லாம் செய்யலாமோ அதை அதை எல்லாம் செய்கிறார்கள்.

இவற்றைக் கட்டுப்படுத்தி நீர்வளத்துக்கு ஏற்படவுள்ள சகலவித ஆபத்துக்களையும் தடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. இப்போதே பிந்திவிட்டாலும், பேராசிரியர் கூறியது போல நிலத்தினடி நீர் உவராகும் ஆபத்தைத் தடுக்க உடனடியாகத் தரைநீர் கட்டுப்பாட்டுச் சபை ஒன்று நிறுவப்பட வேண்டும்; வெறும் வாய்ப்பேச்சை விட்டு, செயலில் இறங்கியாக வேண்டும்.

ஒருதுளி தண்ணீர்கூட வீணாகப் போகாமல், தேவையின்றிப் பாவிக்கப்படாமல், அதிகமாகப் பாவிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்; அது மாசடையாமல் தடுக்க வேண்டும்; தாக்கப்படாமல், தீண்டப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

குடாநாட்டின் சகல பகுதிகளிலும் அடிக்கடி நீரியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல் அவசியம்; தண்ணீரின் தன்மைகள், அதனைப் பாதுகாக்கும் வழிகள் மக்களுக்குப் பரந்த மட்டத்தில் புகட்டப்பட வேண்டும். நீர் நிர்வாகம் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் தெரிந்திருக்கும் வகையில் போதனைகள், பிரசாரங்கள் செய்யப்படுதல் அவசியம்; இவற்றைச் செயலாக்குவதற்கு ஒரு பொறுப்பான நிறுவனம் தேவை; அப்போதுதான் தண்ணீர் தற்காப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட முடியும்.

## தரிசனம் தா சக்தீ...!

புல்நெறியை புன்மையினைப்
புடமிடுவாய் சக்தி
மலையனுடன் கடலினிலே
நடமிடுவாய் சக்தி
எல்லவரும் கருமுகிலை
நடிதொழுநற் சக்தி
தலையினிலே தழவெடுத்தோம்
தரிசனந்தா சக்தி...

—நிம்மதி

(இன்று துர்க்கை அம்மன் 5 ஆம் திருவிழா)

# 897 விண்ணப்பங்கள் பரிசீலனையில்

## தலைவர் அல்லது உறவினர் இழந்த குடும்பங்களுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், செப். 5

குடும்பத் தலைவர்களை இழந்த அல்லது உறவினர்களை இழந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பணத்தை வழங்குவதற்கு யாழ் செயலகத்தில் 897 பேர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிவாரணப் பணத்தைப் பெறுவதற்கு மூவாயிரம் படிவங்கள் யாழ் செயலகத்தினால் வழங்கப்பட்டிருந்தன.

ஆயிரம் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் செயலகத்துக்கு மீள அனுப்பிவைக்கப்பட்டபோதிலும் 897 பேரினது விண்ணப்பப் படிவங்களே நிவாரணம் வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படவுள்ளன.

இதேவேளை இந்த நிவாரணத்தைப் பெறுவதற்கு அனுப்பப்பட்ட பல விண்ணப்பங்களுடன் போலித்தகவல்களும் இணைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக ஒவ்வொரு படிவமும் மிக அவதானமாகப் பரிசீலிக்கப்பட்டுத் தகுதியானவர்களுக்குத் தலா 60 ஆயிரம்ரூபா வீதம் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே 20 பேர் இந்த நிவாரணத்தைப் பெற்றுள்ளதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த-10)

### பழைய பாண் விநியோகம்

காரைநகரில் விநியோகிக்கப்பட்டுவரும் பாண் நிறை குறைவாக இருக்கின்றது; பழைய பாணும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது; இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். வழங்கப்பட்டு வரும் கோதுமை மாவும் பழைய இருப்பு மா என மக்கள் குறைகூறுகின்றனர். (க-73)

## படையினரின் பழிவாங்கும் கொலைகளை விசாரிக்கப் பொலிஸ் குழு

கொழும்பு, செப் 5

பழிவாங்கல் கொலைகளில் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுவதாகக் கூறப்படுவது பற்றி விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் பொலிஸ்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

தங்காலையில் கடந்த வாரம் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்கள் குறித்து ஏழு பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார். (த-எ)

### மட்டக்களப்பு விமானத்தள விஸ்தரிப்பு

## வெளியேறியோருக்கு விரைவில் நஷ்டஈடு

மட்டக்களப்பு, செப். 05

மட்டக்களப்பு விமானப்படைத் தளம் விஸ்தரிப்புக் காரணமாக சுற்றுடலில் இருந்து வெளியேறியவர்களிற்கான நஷ்டஈடு விரைவில் வழங்கப்படும்.

இத் தகவலை மாவட்டக் காணி ஆணையாளர் திருமதி எம். கே. அன்வராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

நஷ்ட ஈட்டுத் தொகையாக மதிப்பீட்டுத் திணைக்களம் 01 கோடி 21 இலட்சம் 51 ஆயிரம் 900 ரூபா சிபார்சு செய்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சிடம் நாம் வட்டி உட்பட நஷ்டஈட்டுத்தொகையாக 1 கோடி 38 இலட்சம் 53 ஆயிரம் 166 ரூபா கோரி விண்ணப்பம் செய்துள்ளோம்.

196 பேருக்கு ரூபா 3,000 முதல் 3½ இலட்சம் வரை நஷ்டஈடு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது என்கிறார். (இ-21)

### துணைவி அரசடிப் பிள்ளையார்

யாழ்ப்பாணம், செப் 5

துணைவி அரசடிப்பிள்ளையார் கோயில் அலங்கார திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பம் ஆகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும்; 13 ஆம் திகதி புதன்கிழமை சப்பரத்திருவிழாவும் மறு நாள் ஊஞ்சல் பாட்டு திருவிழாவுடன் முடிவு பெறும். (த)

# புதிய ஆசிரியர் நியமனங்களில் தொண்டர் ஆசிரியருக்கு முன்னுரிமை தேவை

## கல்வி அமைச்சருக்கு எம். பி. மகஜர்

யாழ்ப்பாணம் செப்: 5

ஆசிரியர் நியமனத்திட்டத்தில் வசதிக்கட்டணத்திலும், பாடசாலை அபிவிருத்தி நிதியிலும் தற்காலிகமாக கடமை புரிவோருக்கு முன்னுரிமை வழங்குவதே சிறந்ததாகும்; இதனைத் தங்கள் மேலான கவனத்துக்கு கொண்டு வருவதுடன் இதற்குச் சாதகமான பதில் தருவீர்கள் எனவும் எதிர்பார்க்கிறேன்.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு: கே. நவரத்தினம் கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளின் வசதிக் கட்டணத்திலும் அபிவிருத்திச் சங்க நிதியிலும் பல வருடங்களாக 50 ரூபா முதல் 100 ரூபாவரை விசேஷ கொடுப்பனவுடன் ஆசிரியர்கள் கற்பித்து வருகிறார்கள்.

இவர்கள் ஜீ. சி. ஈ. சாதாரண தரப்பரீட்சையிலும் உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி அடைந்தவர்களாக உள்ளனர்.

கல்வித் தகைமைகள் இருந்தும் சுமார் ஐந்து வருடங்களுக்கு மேலாக நிரந்தர ஆசிரியர் நியமனம் இன்றி இருக்கின்றனர்.

இவர்கள் பற்றி கல்வி அமைச்சும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ்வாறு மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### முல்லைத்தீவில்

## கால் நடைப் பண்ணையாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

முல்லைத்தீவு, செப்: 5

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முதன் முறையாக கால் நடைப் பண்ணையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு கால் நடை அபிவிருத்தித் தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு கே. யோகநாதன் அவர்களால் குமுளமுனை கிழக்கு - மேற்கு, முல்லைத்தீவுப்பட்டினம், வெள்ளா முள்ளிவாய்க்கால் ஆகிய இடங்களில் மேற்படி சங்கங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மேலும் பல இடங்களில் விரைவில் சங்கங்களை ஆரம்பிக்க இருப்பதாகவும் திரு. கே. யோகநாதன் தெரிவித்தார். (த-92)

### கூட்டுறவு ஊழியருக்கு பென்ஷன்

கொழும்பு, செப் 5

கூட்டுறவு ஊழியர்களுக்கும் பென்ஷன் வழங்கும் திட்டம் ஒன்று கொண்டு வரப்படவுள்ளது.

இதற்கான சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார் (த-எ)

# மனித உரிமைகளைப் பேண அமைதியை உருவாக்குவது அவசியம்

## நாடாளுமன்றக் குழுவிடம் ஜனாதிபதி

மனித அடிப்படை உரிமைகளை அனுபவிக்கும் உரிமை எல்லாப் பிரஜைகளுக்கும் இருக்க வேண்டும்; மனித உரிமைகள் மீறப்படுவதிலிருந்து நிவாரணம் பெற, நியாயம் பெற நீதிமன்றம் செல்லும் உரிமையும் எல்லோருக்கும் உண்டு.

மனித உரிமை மீறப்படாமல் தடுப்பதற்கு மேலதிகமாக ஒழுக்கக் கோவைகள் சட்டரீதியாகச் சேர்க்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் கருதினால் அவற்றை முன் வைக்கலாம்.

இவ்வாறு ஜனாதிபதி திரு: ஆர். பிரேமதாச, இம்மாதம் முதலாம் திகதி தம்மைச் சந்தித்துப் பேசிய மனித அடிப்படை உரிமைகள் சம்பந்தமான நாடாளுமன்றக் குழுவிடம் தெரிவித்தார்.

திரு: மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான எம்.பிக்களைக் கொண்ட பிரஸ்தாப குழு ஜனாதிபதியை சந்தித்து மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தது.

பொதுமக்கள் தமக்குரிய அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதில் உள்ள சகல தடைகள், தடங்கல்களையும் நீக்க வேண்டும் எனக் குழுவினர் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர்.

1987 அக்டோபரின் பின்னர் நாட்டில் மொத்தம் 4,600 பேர் வரை கொலை செய்யப்பட்டுள்ளனர்—

கடந்த மார்ச் மாதத்தில் அவசரகால நிலையை நீக்கினோம்; 1800 பேரை விடுதலை செய்தோம்; அவர்களில் பலர் இப்போது வன்செயல்களில் ஈடுபடுகிறார்கள்—

மக்களை துப்பாக்கிகொண்டு பயமுறுத்துகிறார்கள், பல தந்திரங்கள் யுக்திகளைப் பயன்படுத்துகிறார்கள். .... என்ன தேவை என்பதைச் சொல்கிறார்கள் இல்லை—

நாட்டில் வன்செயல்களை நிறுத்தி அமைதியை நிலைநாட்ட சகல அரசியல் கட்சிகளும் பாடுபட வேண்டும்; அமைதியை உருவாக்குவது என்ற இலட்சியத்துக்காகப் பேதங்களை மறந்து ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும்—

அமைதி நிலைநாட்டப்பட்டால்தான் மனித அடிப்படை உரிமைகளைப் பொதுமக்கள் அனுபவிக்க வாய்ப்பு உண்டாகும்; அதனை உணர்ந்து சகலரும் அதற்காக உழைக்க வேண்டும்—என்று ஜனாதிபதி சொன்னார்.

இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதியுடன் பிரதமர் திரு: டி. பி. விஜயதுங்கா அமைச்சர்கள் காமினி திசாநாயக்கா வின்சென்ட் பெரேரா ரணில் விக்கிரமசிங்கா பெஸ்டஸ் பெரேரா ஆகியோரும் கூட இருந்தனர். (அ)

## சமய சந்நிதிகளில்

### மகோற்சவம்

யாழ்ப்பாணம், செப் 5

பண்டத்தரிப்பு பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி தேவஸ்தான மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

### சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் உற்சவம்

சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவங்கள் செவ்வாய்க்கிழமை கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகும்.

பத்து நாள் உற்சவங்கள் 13ஆம் 14ஆம் திகதிகளில் நடைபெறும் தேர் தீர்த்த உற்சவங்களுடன் நிறைவுறும்.

### அன்பளிப்பு

கடந்தகால அசம்பாவிதங்களின் போது முற்றாக வீடுகள் சேதமடைந்த அல்லது எரியுண்ட ஊரெழு, உரும்பிராய் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு அலுமினியப் பாத்திரங்கள் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டன. (த-72)

### சிவதீட்சை

அராலி கிழக்கு ஐயனார் ஆலயத்தில் ஐயனார் சைவ சமய அபிவிருத்திச் சங்கத்தின் சார்பாகச் சிவதீட்சை வைபவம் சிறப்பாக நடாத்தப்பட்டது இவ்வைபவத்தில் பலருக்குச் சிவதீட்சை அளிக்கப்பட்டது. (த)

## வாசகர் திருமுகம்

### காரைநகர் மேற்குவீதி

காரைநகர் மேற்கு வீதி அரைகுறையாகத் திருத்தப்பட்டு இடையில் விடப்பட்டுள்ளது; இதனால் மேற்கு வீதிக்கான போக்குவரத்தாவும் வாரிவளவுடன் நிறுத்தப்பட்டு விடுகின்றன; இதனால் களபூமி, பலகாடு கிராம மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமப்படுகின்றனர். சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

—தி. சிவகுமார்

காரைநகர்.

### கச்சாய் வீதிகள்

கொடிகாமம் மத்தியசந்தை இ: போ. ச பஸ்நிலையம் ஆகிய இடங்களிலிருந்து கச்சாய்க் கடற்கரை வரை தெற்கு நோக்கி செல்லும் சுமார் மூன்று மைல் தூரமான வீதியும் இதுபோல சாவகச்சேரியிலிருந்து கிழக்கு நோக்கி இவ்வீதியை தொடும் சுமார் 2 1/2 மைல் நீளமான வீதியும் வெகுவாகப் பழுதடைந்துள்ளன; துவிச்சக்கர வண்டிகள்தானும் செல்ல முடியாத குன்றும் குழியுமாக அமைந்துள்ளன; பாதசாரிகள் தானும் செல்ல முடியாமல் கிளம்பிய கற்கள் பாதத்தை வருடி காலை உறுத்துகின்றன.

எனவே பொதுமக்களின் நலன் கருதி இவ்வீதிகளையும் புனரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா?

தி: செல்லத்துரை

கொடிகாமம்.

### சங்கீத பாட பெறுபேறு

1989ஆம் ஆண்டு நடைபெறஇருந்த கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை அசம்பாவிதம் காரணமாக 1988ஆம் ஆண்டு ... மாதம் நடைபெற்றது; சங்கீத பாடத்திற்கு தோற்றிய மாணவர்கள் எழுத்துப் பரீட்சையை முடித்த பின் பெறுபேறுகள் வெளிவந்தன; பின்பு சங்கீத பாடத்திற்கு செய்முறைப் பரீட்சை நடைபெற்றது; இச்சங்கீத பாடத்தின் பெறுபேறுகள் இதுவரை கிடைக்கவில்லை. இதற்கு ஆவன செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

சி. செல்லையா ஜே.

கரவெட்டி.

## கண்டதும் கேட்டதும்

யாழ்ப்பாணம் அலுப்பாந்திக் கடற்கரைக்கு காலை நேரத்தில் மீன் வாங்கச் செல்வோரை துர்நாற்றம் ஒன்று திரும்பிப் பார்க்க வைக்கிறது; கரையில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் கடல் அட்டைகளே இதற்குக் காரணம்.

கடல் அட்டைகளை கரையில் வைத்தே தரம் பிரிக்கிறார்கள்: அந்த இடத்தில் வைத்தே அதனைக் கீறி குடலை வெளியே பிதுக்கி எடுக்கும் வேலையும் நடக்கிறது. அதிலிருந்து வரும் துர்நாற்றம் மீன் நாற்றத்தையும் மிஞ்சி அப்பகுதி முழுவதும் வியாபிக்கிறது.

பாலைதீவு, இரணைதீவுக் கடற்பகுதிகளிலேயே கடல் அட்டைகள் பெரும் அளவில் பிடிபடுகின்றன; ஆரம்பத்தில் கடல் அட்டைகளை "மண்டா" மூலம் குத்தியே பிடித்து வந்தனர்; பின்பு முகத்துக்கு கவசம் அணிந்து சுழியோடிப் பிடித்து வந்தனர்; தற்போது ட்ரோலரின் உதவியால் மிகவும் இலகுவாக கடல் அட்டைகள் கடலில் அடியில் இருந்து அள்ளி எடுக்கப்படுகின்றன.

கடல் அட்டைகள் குடல் எடுக்கப்பட்ட பின் நன்றாக அவிக்கப்படுகின்றன; பின்பு காயவைக்கப்பட்டு கொழும்பு அனுப்பப்படுகின்றன; கொழும்பில் உள்ள பெரிய கம்பெனிகள் இவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன.

கடல் அட்டை வியாபாரம் பெரும் லாபம் தரும் தொழில் என்கிறார்; இதில் ஈடுபட்டுள்ள ஒருவர் காயவைக்கப்பட்ட ஒரு கிலோ கடல் அட்டை என்ன விலை போகிறது தெரியுமா? 600 ரூபா வரை விலை போகிறது!

— செய்திலோல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிகள் விற்பனைக்கு

1. சூராவத்தை புனித திரேசா ஆலயத்துக்குக்கிட்ட கமச்செய்கைக் காணிபரப்பு 10, குழி 16
2. சூராவத்தை அம்மன் கோயிலுக்குக் கிட்ட பரப்பு 7
3. சுன்னாகம் குமாரசுவாமி புலவர்வீதி (கொத்தியாலடி) தொழிற்சாலை நடத்தியகாணி பரப்பு 10, குழி 12, சுற்றுமதில், கட்டிடம், குழாய்க்கிணறு, 1800 கன்று கமச்செய்கைத் தறையுடன்;

தொடர்பு கொள்க:

**R. E. JOSEPH**

குமாரசுவாமிப்புலவர் வீதி,
சுன்னாகம்.

(சுன்னாகம் புகையிரத நிலைய பாதையில் இருந்து 200 யாருக்குள் நீர்ப்பாசன கிணற்றுக்கு அருகில்)

(த 18)


# சமுகமளிக்கும் மாணவருக்கு வகுப்புக்கள் நடத்தப்பட வேண்டும்

## பாடசாலைகளுக்கு பணிப்பு

வவுனியா, செப் 5

பாடசாலைக்குச் சமுகமளிக்கும் மாணவர்களுக்குக் கட்டாயம் வகுப்புகள் நடத்தப்படவேண்டும்;

இவ்வாறு சகல பாடசாலைகளுக்கும் பணிக்கப்பட்டுள்ளதாக வவுனியா கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன-

வவுனியாவில் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படுவதால் பாடசாலைக்குச் செல்லும் மாணவருக்கு ஆசிரியர்கள் படிப்பிப்பதில்லை என்று வவுனியாப் பகுதியில் பெற்றோர்கள் அதிகாரிகளிடம் முறையிட்டனர்;

இதனைத்தொடர்ந்து பாடசாலைகளுக்குத் திடீர் விஜயம் மேற்கொண்ட கல்வித்திணைக்கள அதிகாரிகள் மாணவர்கள் ஆசிரியர்களது நிலைமைகள் குறித்து நேரடியாகக் கண்டறிந்தார்கள். இதன்பின்னரே மேற்படி பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது; (த-164)

## வீடுகள் அமைக்க நடவடிக்கை

பச்சிலைப்பள்ளி, செப் 05

பல உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வீடுகள் எரிக்கப்பட்டவர்களுக்கு புதிய வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

அதற்கான படிவங்கள் இவ்வப்பகுதி கிராமசேவை அலுவலர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன; (த-117)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

கிளிநொச்சி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கத் தலைவர் திரு பி. நிக்கிளாஸ் தலைமையில் கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்; கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் பனம் பொருள் பகுதி திரு: ரி. சபாரத்தினம் மற்றும் தலைமைக் காரியாலய பரிசோதகர் திரு:ரி. பாலசிங்கம் ஆகியோர்பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்; (க)

# நாட்டின் நிதிநிலைமையில் பெரும் பாதிப்பு இல்லை!

## மத்திய வங்கி ஆளுநர் கூறுகிறார்

கொழும்பு, செப் 5

இரண்டு வாரங்களுக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மட்டுமே போதுமான வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பு இருப்பதாகக் கூறப்படுவது தவறானதாகும். நாட்டின் நிதி நிலைமை அவ்வளவு தூரம் பாதிக்கப்படவில்லை;

மத்திய வங்கி ஆளுநர் நெவில் கருணாரத்தின இவ்வாறு தெரிவித்திருக்கிறார்:

அவர் மேலும் சொன்னதாவது:—

நான்கு அல்லது ஐந்து தினங்கள் மட்டுமே நடைபெறும் வேலைநிறுத்தம் காரணமாக நாட்டின் பொருளாதாரம் மோசமாகப் பாதிக்கப்படாது; ஓரளவு தாங்கிக் கொள்ள முடியும்.

வேலை நிறுத்தம் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் தொடர்ந்து நடந்தால் அது அழிவைத் தான் கொண்டு வரும்;

நாட்டின் வெளிநாட்டுக் கடன்கள் 400 கோடி டாலர் ஆகும்; தற்போதைய நெருக்கடி காரணமாக அக்கடன்களை மீண்டும் புதுப்பிக்க வேண்டிய தேவை எமக்கு ஏற்படாது;

—இப்படி அவர் தெரிவித்தார்;

நாட்டின் பொருளாதார எதிர்காலம் பற்றி மத்திய வங்கி வைத்திருக்கும் நம்பிக்கை, பெரிதுபடுத்திக் காட்டப்படுவதாக அமைந்திருக்கிறது என கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளும் வர்த்தகப் பிரமுகர்களும் தெரிவித்தனர்; (உ-எ)

## நியமனம்

பண்டத்தரிப்பு, செப் 5

இலங்கை வங்கியின் மானிப்பாய்க்கிளை முகாமையாளராக திரு சி. என். நவரத்தினராசா நியமனம்பெற்றுள்ளார்;

இவர் முன்பு இலங்கைவங்கியின் கொழும்பு தலைமை அலுவலகத்தில் பரிசோதகராகபணி புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது; (க-120)

# நிவாரணப் பொருள்களுடன் கப்பல் அனுப்ப இந்தியா அனுமதி கோருகின்றது

கொழும்பு, செப் 5

எதிர்வரும் ஆறும் திகதி நிவாரணப் பொருள்களுடன் கப்பல் ஒன்றைத் திருகோணமலைத்துறைமுகத்துக்கு அனுப்ப இந்தியா தீர்மானித்துள்ளது; இதுசம்பந்தமாக இலங்கை அரசுக்கு இந்தியா விண்ணப்பம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது;

பாதுகாப்புஅமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல இதனைத் தெரிவித்தார்;

'இந்த விண்ணப்பம் அரசின் பரிசீலனையில்இருக்கிறது; இருநாட்டுஅதிகாரிகளும் இது விஷயத்தில் இணைந்து செயல்படுவர்' என்றும் அவர் கூறினார்; (த-எ)

## விசேட கூட்டம்

மன்னார் செப் 5

மன்னார் மாவட்ட இந்து சமூக கலாசார நிலையங்களின் பேரவை விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி திருக்கேதீஸ்வரம்திருவாசகமடத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது;

இக்கூட்டத்திற்கு மன்னார் மாவட்ட இந்து சமூக கலாசார நிலையங்களைச் சேர்ந்த பேராளர்களும் சைவநெறி ஆர்வலர்களும் கலந்து கொள்வர்;

இக்கூட்டத்தில்பல முக்கிய பிரச்சனைகள் ஆராயப்படும்; (த-ரி)

## மினிபஸ் கட்டணம் குறைப்பு

யாழ் மண்டைதீவு மினிபஸ் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது: மண்டைதீவு பிரதான வீதி பொதுமக்களின் போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டதே இதற்கான காரணமாகும் வழமையாக 5 ரூபாவாக இருந்த கட்டணம் தற்பொழுது 4ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. (க-88

## சம்பளம் இல்லை

மாங்குளம், செப் 5

முல்லைத்தீவு வைத்தியசாலை சலவைத் தொழிலாளி ஒருவருக்கு கடந்த 24 மாதங்களாக வேதனம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது; (த-94)

## திருவிழாவில் தினமும் கதாப்பிரசங்கம்

அரியாலை நீர் நொச்சித்தாழ்வு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவத்தின் போது தினமும் கதாப்பிரசங்கம் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது:

க. பொ. சாதரண உயர்தர பரீட்சையில் இந்துசமய பாடத்திற்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி அவர்களின்பாடத் திட்டத்திற்கு அமைந்தவகையில் தினமும் ஒவ்வொருதலைப்புக்களில் திரு: சு.பு.கணேசசுந்தரத்தால் [illegible] மணியிலிருந்து 4 மணி வரை கதாப்பிரசங்கம் நிகழ்த்தப்படும்; (க - 169)


## குவைத் நாட்டில் பெண்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு

50 HOSPITAL CLEANERS 4000 சம்பளம்

21 HOSPITAL SUPERVISORS 5000 ,,

வேலை 8.00 மணி நேரம்
சாப்பாடு, தங்கும் வசதி இலவசம்
உடனடிப் பிரயாணம்

மேலும் குவைத், டுபாய், அபுதாபி, சார்ஜா, ராஸல்கைமா, அல்ஐன், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கும்

பணிப் பெண்கள் உடனடியாகத் தேவை

சம்பளம்: 3500 முதல் 4000 வரை
டெயிலர்: சம்பளம்: 3600 முதல் 5000 வரை

மேலதிக விபரங்களுக்கு பாஸ்போட், பாஸ்போட் சைஸ் படம் 06, ஆகியவற்றுடன் உடனடியாக சமுகம் அளிக்கவும்;

**ஸ்கொயார் டீல்ஸ்**

141, செட்டியார் தெரு;
(டீமன் ஹவுஸ் மேல் மாடி)
கொழும்பு-11

தொலைபேசி: 436331 (1871)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும் ● நன்றி நவிலலும் ●



தோற்றம்: 14 - 03 - 1942

●

மறைவு: 07 - 08 - 1989

அமரர்

### முத்தர் வேலுப்பிள்ளை குணரத்தினம்

அன்பின் திருவுருவே, பண்பின் உறைவிடமே பாசத்தின் முழுவடிவே, ஆருயிர் அப்பாவே! நேசமுடன் எமை வளர்த்த வாசப் பூங்காவே பாரில் நாம் உள்ளவரை பாசம் மறவோம்;

மனைவி மக்கள் மனமுருக, தந்தை சகோதரர்கள், [illegible]மி தவித்து அழ தலைவிதி என்றாலும் தாங்காது [illegible]டிக்கின்றோம் யாருடனும் பேசாமல் தனிப்பயணம் [illegible]னப்பா; ஊற்றுர், உறவினர் யாருக்கும் நீர் செய்த [illegible]தவிகள் சொல்லிச் சொல்லி உருகிறோர் பல்லோரே; [illegible]ரமனின் அருகிருந்து பாவிகள் எமக்காக பரிந்துரை [illegible]ழங்கிடுவீர், பாசமிகு அப்பாவே;


07 - 08 - 1989 இல் நடைபெற்ற இறுதிக்கிரியை[illegible]யில் பல்வேறு கண்டங்கள் மத்தியில் கலந்து கொண்[illegible]டார்களுக்கும், பல்வேறு விதங்களில் உதவிய யாவருக்[illegible]கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் 06-09-89 [illegible]ல் வீட்டில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளி[illegible]லும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு [illegible]ற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் [illegible]அன்போடு அழைக்கின்றோம்;

இங்ஙனம் பிரிவால் வாடும்

[illegible]மனைவி: சிவபாக்கியம்
[illegible]பிரபாகரன் (மகன்) கனடா,
[illegible]சுதாகரன் (மகன்) சுவிஸ்,
[illegible]கிருபாகரன் (மகன்) கனடா,
[illegible]தாகினி (மகள்) (Computer Science Student)
[illegible]ஜிகரன் (மகன்) (அச்சுவேலி மகாவித்தியாலய மாணவன்)
[illegible]திவாகரன் (மகன்) மாணவன்
[illegible]சசிகரன் (மகன்) மாணவன்
[illegible]ரஜனி (மகள்) மாணவி
] யா/ இரத்தினேஸ்வரி வித்தியாசாலை

"சிவமஹால்"
[illegible]மான நிலைய வீதி, பத்தமேனி,
அச்சுவேலி; 05 - 09 - 89 [1923]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்வன் கந்தையா வேலாயுதகுமாரர் (குமார்)

ஆண்டவன் படைத்தார்: 23 - 10 - 1965 ஆண்டவன் அழைத்தார்: 23 - 07 - 1989

தலைமகனாய் தன்னலம் கருதாது பிறர் நலம் கருதி
உற்றார் உறவினர் நண்பரை அரவணைத்து
விருந்தோம்பும் பண்பாலனே!
எவ்வுயிர்க்கும் தன்னாலாய உதவி நல்கும் உத்தமனே
அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்மை மிக்கவனே
குழந்தைகளோடு கூடி மழலைமொழி பேசி
விளையாடும் குமாரனே!
சிறியோர் பெரியோரால் அன்பாக "தம்பி" என்று
அழைக்கப்படும் அன்பனே!
பிறநாடு விரும்பாது தன் நாட்டை
நேசித்து நின்ற அபிமானியே!
இன்று எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
எங்கு நீ சென்றனையோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை இறைஞ்சி நிற்கும்;

உடையார் வளவு,
மயிலனி,
சுன்னாகம்;

உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(இ/3608)


## தேவை

புத்தகம் கட்டுவதில் அனுபவம்மிக்க பெண், பைண்டர்கள் தேவை; நேரில் சமூகமளிக்கவும்;

தொடர்புகள்:-

**புதிய சித்திரா பதிப்பகம்,**
664, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(2040)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி

### ஆறுமுகம் பொன்னம்மா

தோற்றம்: 22 — 11 — 1940 மறைவு: 17 — 08 — 1988

● திதி: 05 — 09 — 1989 ●

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும்
பெற்றுப் பேணி வளர்த்த எங்கள்
அன்புத் தாயே!
நீங்கள் மறைந்து ஓராண்டு தான் சென்றாலும்
இரும்பாக்கி எம் மனதை இருக்க நினைத்தாலும்
கரும்பான உம் நினைவுகள் எமை வாட்டுகிறதே!
எப்போதும் அருகிருந்து அணைத்த தெய்வமே!
நீங்கள் சென்று விட்ட மூன்றே மாதங்களில்
அப்பாவையும் அழைத்துக் கொண்டீர்களே!
எங்கள் அம்மா எங்கே? அப்பா எங்கே? என்று
தினம் தினம் ஏங்கி அழுகின்றோம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய தினம் தினம் கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செலுத்துகின்றோம்;

பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

பெரிய பாதி,
வதிரி, கரவெட்டி: [1700]

ஸ்ரீராம ஜெயம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



அமரர்

### வைத்திலிங்கம் தர்மரட்ணம்

(நகராட்சி மன்றத் தலைவர்)

தோற்றம்: 20 · 11 · 1920 மறைவு: 06 · 08 · 1989

திதி: 05-09-89

எங்கள் குடும்ப ஒளி விளக்காய், அன்புடன் எங்களை எல்லாம் வளர்த்து ஆளாக்கிய எமக்கு வழி காட்டிய குலவிளக்கே! அன்பின் ஊற்றாய் அறிவுச் சுடராய் பாசத்தின் உறைவிடமாய் கலகலத்துச் சிரித்த உங்கள் பூமுகம் காணாது தவிக்கின்றோம்:

எமது குடும்பத்தலைவரின் 31ஆம் நினைவு நாளாகிய (05-09-89) செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ள கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

இங்ஙனம்

திருமதி தர்மரட்ணம், பிள்ளைகள்

விஷ்ணுபவனம்
சண்டிலிப்பாய் ரோட்,
பண்டத்தரிப்பு; [3318]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ராஜீவ்காந்தி அரசுக்கு எதிராக சத்தியாக்கிரக இயக்கம் நடத்த ஜனதா தள் நடவடிக்கை

புதுடில்லி, செப் 4

ராஜீவ் காந்தி அரசைப் பதவி விலகக் கோரி புதிய போராட்டம் ஒன்றை ஜனதா தள் ஆரம்பிக்க உள்ளது.

விலைவாசி உயர்வு, பணவீக்கம் ஆகிய காரணங்களை முன் வைத்து நாடு தழுவிய சத்தியாக்கிரகப் போராட்டமாக இது அமையும்.

போராட்டத்துக்கான வழிமுறையை நிர்ணயிப்பது பற்றி ஜனதா தள் தலைவர் வி. பி. சிங் ஏனைய கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தி வருகின்றார்.

ஜனதா தள்ளின் அரசியல் விவகாரக்குழுக்கூட்டம் வெள்ளி, சனி ஆகிய தினங்களில் நடைபெற்றபோது இது பற்றி ஆராயப்பட்டது. (எ)

● ஆஸ்திரிய ஜனாதிபதிக்கு

## நாஸிகளுடன் தொடர்பிருந்தது குறித்துபிரிட்டிஷ் அறிக்கை

லண்டன், செப். 4

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஆறு பிரிட்டிஷ் கமாண்டோக்களை நாஸிகள் தூக்கிலிட்ட சம்பவத்தில் ஆஸ்திரிய ஜனாதிபதி கோர்ட் வால்ட்ஹீமுக்குத் தொடர்பு உண்டா என்பது பற்றிய விசாரணையின் முடிவுகளை வெளியிடப் போவதாக பிரிட்டிஷ் அரசு அறிவித்திருக்கிறது.

திரு. வால்ட்ஹீம் ஐ. நா. பொதுச்செயலாளராகப் பணியாற்றியவர்.

பிரதமர் தாட்சரின் உத்தரவின் மீது 1988 பெப்ரவரி மாதத்தில் இந்த விசாரணை நடத்தப்பட்டது.

விசாரணை அறிக்கை இன்னும் சில வாரங்களில் வெளியிடப்படும் என்று பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

அறிக்கை வெளியிடப்படும் திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## 50 ஆண்டுகளுக்கு முன்னர்...

வார்சோ, செப். 4

50 ஆண்டுகளுக்கு முன்னர் ஜேர்மன்படைகள்போலந்தை ஆக்கிரமித்த தினம் [1-9-1939] நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இரண்டாம் உலகமகாயுத்தம் போலந்து ஆக்கிரமிப்புடன் தான் ஆரம்பமானது. [எ]

● அமெரிக்கத்தூதரகத்தின்

## வி.பி.சிங்கின் இரகசிய தொடர்பு; ஜனாதிபதியிடம் முறையீடு!

புதுடில்லி, செப் 4

புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு ஜனதா தள் தலைவர் வி. பி. சிங்கினால் அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப்படும் இரகசிய தஸ்தாவேஜுகள் ஜனாதிபதி வெங்கடராமனிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

திரு. சிங்கின் முன்னாள் அரசியல் செயலாளர் செய்யத் அஷ்ரப் இத்தகவலை பம்பாயில் வெளியிட்டார்.

இந்த இரகசிய தஸ்தாவேஜுகளில் ஒன்று சோவியத் யூனியனுடனான பாதுகாப்பு உடன்பாடு சம்பந்தமானது.

மற்றது வெளியுறவு அமைச்சு சம்பந்தப்பட்டது.

"இந்தத் தஸ்தாவேஜுகளின் பிரதிகள் என்னிடம் உள்ளன. அவற்றை ஜனாதிபதி வெங்கடராமனிடம் நேரில் கொண்டுபோய் ஒப்படைப்பேன்"-என்று ஜனாப் அஷ்ரப் தெரிவித்தார்.

திரு. வெங்கடராமன் இம்மாதம் 9 ஆம் திகதி புதுடில்லி திரும்புகிறார். (எ)

## வழுவூராருக்கு 81 வயது

பிரபல பரதநாட்டிய மேதை வழுவூர் ராமையாபிள்ளை தனது 81ஆவது பிறந்த தினத்தை கடந்த வியாழக்கிழமை சென்னையில் கொண்டாடினார்.

## ஞாயிறுமுதல்தூரதர்ஷனில் 'நட்சத்திர சுவாமி' தொடர்!

புதுடில்லி, செப்: 04

இன்று(ஞாயிறு) முதல் இந்தியாவின் தூரதர்ஷன் குழந்தைகளுக்கான "வானவியல்" சம்பந்தமான ஒலிபரப்பு ஒன்றை நடத்தவுள்ளது.

'நட்சத்திர சுவாமி' என்ற தலைப்பிலான இந்தத்தொடர் நான்கு பகுதிகளாக ஒலிபரப்பப்படும்.

பூமி உட்பட சகல கிரகங்கள் பற்றிய பிந்திய தகவல்கள் இத் தொடரில் இடம்பெறும்.

ஜவஹர்லால் நேரு நினைவு நிதியம் இதனைத் தயாரித்துள்ளது. (எ)

## வலேசாவின் 'பொம்மை' அல்ல; போலந்து பிரதமர் அறிவிப்பு!

புடாபெஸ்ற், செப்: 4

சொலிடாரிட்டி தலைவர் லெச் வலேசாவின் கைப் பொம்மையாக நான் இருக்க மாட்டேன்.

போலந்தின் புதிய பிரதமர் ராடுஸ் மஸோவிக்கி முன் கண்டவாறு தெரிவித்தார்.

திரு. மஸோவிக்கி சொலிடாரிட்டிக் கட்சியின் சார்பில் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார். சொலிடாரிட்டித் தலைவர் வலேசா தற்போதைக்கு தொழிற்சங்க வளர்ச்சியில் தான் தனது கவனத்தைச் செலுத்துவார்.

அரசாங்கத்தை நடத்தும் பூரண சுதந்திரம் எனக்குத் தரப்பட்டுள்ளது. திரு. வலேசாவுடன் நான் ஆலோசனைகள் நடத்துவது தொடரும். இதன் அர்த்தம் திரு. வலேசா என்னை ஆட்டிப் படைக்கலாம் என்பது அல்ல - இப்படி திரு. மஸோவிக்கி தெரிவித்தார். (எ)

● எம். ஜி. ஆரை குறை கூறிய

## கருணாநிதியின் பேச்சுக்கு ஜெயலலிதா கண்டனம்!

சென்னை செப் 4

எம்ஜிஆரைக் கண்டித்துப் பேசியதற்காக முதலமைச்சர் கருணாநிதியை அதிமுக பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா குறை கூறினார்.

கடந்த வியாழக்கிழமை எம்ஜிஆர் மருத்துவப்பல்கலைக் கழக அங்குரார்ப்பண விழாவில் முதலமைச்சர் கருணாநிதி "இன்று செய்தாரை இறுத்தல் அவர் நாண..." என்ற குறளைக்கூறி, எம்ஜிஆரைக் கண்டித்திருந்தார்.

இது பற்றி ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் இறந்தவரை அவமானப் படுத்துவது அரசியல் நாகரீகமல்ல என்று கூறியிருக்கிறார். (எ)

● ஆந்திர மாநிலத்தில்

## நக்ஸலைட் தீவிரவாதத் தாக்குதல்கள் அதிகரிப்பு

ஹைதராபாத், செப் 4

இந்தியாவில், ஆந்திர மாநிலத்தில் நக்ஸலைட் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஆந்திரமாநில சட்டசபையைக் கலைத்து விடும் திட்டத்தின் தூண்டுதல் நடவடிக்கையாக இந்த தாக்குதல் அதிகரிப்பு இருக்கலாம் என்று மாநில அரசு வட்டாரங்கள் சந்தேகம் எழுப்பியுள்ளது. (எ)

## விமான விபத்தில் 131 பேர் பலி

ஹவானா, செப் 4

கியூபாவிற்குச் சொந்தமான பயணிகள் விமானம் ஒன்று நொருங்கி விழுந்ததில் 131 பேர் மரணமானார்கள்.

சோவியத் தயாரிப்பான இல்யூஷின் ரக விமானமான இதில் பயணம் செய்தவர்களில் 118 பேர் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் 11 பேர் விமானச் சிப்பந்திகள், 2 பேர் கியூபன் பிரஜைகள். (எ)

## நேபாள மன்னருக்கு இடது சாரிகள் எச்சரிக்கை!

காத்மண்டு, செப் 4

இந்தியாவுடன் இரகசிய உடன்பாடு எதுவும் செய்து கொள்ளக்கூடாது என்று இடதுசாரி ஆதரவு குழுக்கள் கூட்டாக நேபாள மன்னர் பிரேந்திராவிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

இந்தக்குழுக்களில் மாஸ்கோ ஆதரவுபெற்ற மனுன்தார்குழு இடம்பெறவில்லை.

சகல இடதுசாரிக் குழுக்களும் நேபாள அரசினால் தடை செய்யப்பட்டுள்ளன.

நேபாளத்துடனான தற்போதைய நெருக்கடிக்கு இந்தியாவே முழுப்பொறுப்பு என்று இக்குழுக்கள் அறிக்கையில் கண்டித்துஉள்ளன. (எ)

## 20 ஆயிரம் பலஸ்தீனியர்

இஸ்ரேலிய இராணுவத்தினரால் 20 ஆயிரம் பலஸ்தீனியர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட நான்கு பலஸ்தீனியர்கள் இத்தகவலை வெளியிட்டனர்.

தென் லெபனானில் உள்ள எய்ன் ஹெல்வே பலஸ்தீன அகதி முகாமில் நடந்த செய்தியாளர் மகாநாட்டில் பேசுகையில், இஸ்ரேலியருக்கு எதிரான தாயகம் மீட்கும் போராட்டம் தொடரும் என்று நாடு கடத்தப்பட்ட பலஸ்தீனியர்கள் அறிவித்தனர்.

இதனிடையில் — சுதந்திர பலஸ்தீனத்தை அடுத்த சில தினங்களில் பிலிப்பீன்ஸும் அங்கீகரிக்க இருப்பதாக பலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்தது. (எ)

## ஈரான் அதிபரின் ஆலோசகர்

தெஹ்ரான், செப் 4

முன்னாள் பிரதமர் முஸாவீரை தனது ஆலோசகராக ஈரான் ஜனாதிபதி அலி அக்பர் ரப்சன் ஜானி நியமித்திருக்கிறார்.

எட்டு வருடங்களுக்கு முன்னர் ஜனாப் முஸாவீர் பிரதமராக பணியுரிந்தார். (எ)

## அணிசேரா இயக்கத்தில் வெனிசுலா

அணிசேரா இயக்கத்தின் 103ஆவது உறுப்பு நாடாக வெனிசுலா சேர்ந்துஉள்ளது.

வெனிசுலா சேருவதை பனாமா அரசு இதுகாலவரை எதிர்த்துவந்தது. பனாமாவின் உள்விவகாரங்களில் வெனிசுலா தலையிடுவதை எதிர்ப்புக் காரணமாக பனாமா காட்டியது. இப்போது அந்த எதிர்ப்பை பனாமா விலக்கிக் கொண்டுவிட்டது. (எ)


# "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

## நிலையானமுதலீட்டுத்திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
| --- | --- | --- |
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
| --- | --- | --- | --- |
| மூலதனம் | 2,230,000 | 4.365,000 | 8,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,386,335 | 3,030,474 | 5,485,364 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577.482 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283.818 | 7,718.284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206.887 | 25,811.718 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310.787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827.514 | 8,505,201 | 16,880.878 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1.356,206 | 1,372.825 | 2,330.012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

நம்பிக்கையுடன் சேமிக்க
"ஷப்ரு"வை நாடுங்கள்
நிதித்துறையில் உங்கள் நண்பன், அவனே!

பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
(A. I. B. Lond.),
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.),
பொது முகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
(B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அந்தியேட்டிச் சேவையில் பரிட்சையமானவர்களின் நவீன ஸ்தாபனம்!
★ எம்பாமிங் ★ பிரேதப் பெட்டிகள்
ஊர்வல வாகனங்கள் சேவையில்

*

**பிறைற் ஹவுஸ்**
[யாகப்பர் ஆலய அருகில்]
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.



# உதயன்

05 - 09 - 1989 செவ்வாய்க்கிழமை



குழிக்குள் பிரேதம் இறக்கும் இயந்திரம்,
'டிவைன்', ஒப்பின் காஸ்கற்ஸ்,
குறஸ் காஸ்கற்ஸ், மலர் வளையங்கள்

*

**பிறைற் ஹவுஸ்**
[யாகப்பர் ஆலய அருகில்]
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


## பாடசாலைக்குச் செல்லுமாறு-:

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
சைது செய்யவோ மாட்டோம் என்பதையும், மாறாக அவர்களுக்கு உற்சாகமும் பாதுகாப்பும் வழங்குவோம் என உறுதி செய்கின்றோம்!

இந்த தேசத்தின் மிக உறுதியான அரண்கள் மாணவர்கள் என்பதில் மிக நம்பிக்கை உடையவர்கள் நாங்கள்.

எமது அன்பிற்கினிய மாணவர்களே!

உங்களின் கல்வியைப் பாழடிப்பதற்கான பகீரதப் பிரயத்தனம் செய்ய முயலும் தீய சக்திகளின் மாய வலையில் வீழ்ந்து விடாமல் இன்றே நாடெங்கும் சக மாணவர்களும் தத்தமது பாடசாலைகளுக்குச் சென்று கல்வியைத் தொடர்வதுடன் மிகவிரைவில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்குத் தயாராகுங்கள்.

உங்களினதும் எமது தேசத்தினதும் எதிர்காலத்திற்காகவே எம்மையே நாம் அர்ப்பணம் செய்கின்றோம்: உங்களை நாம் கேட்பதெல்லாம் ஒன்றுதான்: வெறும் பாடப் புத்தகத்துடன் மட்டும் உங்கள் அறிவை மட்டப்படுத்தி விடாது இந்த உலகத்தையும் கற்றுக்கொள்ள முயலுங்கள். அப்பொழுது தான் நாங்கள் யார்? என்பதும் எமது தேசத்தின் எதிரிகள் யார்? என்பதும் உங்களுக்குத் தெரியவரும்:

எமது பாசத்துக்குரிய பெற்றோர்களே!

நீங்கள் நேசிக்கும் எமது தேசத்து அமைதியை நாசமாக்கும் ஆயுதவெறி பிடித்தோரின் திட்டமிட்ட நாச வேலைகளில் ஒன்றான பொய் வதந்திகளை நம்பி உங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாது மறைவிடங்களில் வைத்திருப்பது பாதுகாப்பானது என நினைக்க வேண்டாம்.

உங்கள் பிள்ளைகள் மறைவிடங்களில் இருப்பது என்பது அவர்கள் மீதான சந்தேகத்தினை வலுப்படுத்தவே உதவும்.

அவர்கள் அவ்விடத்தில் கைது செய்யப்பட நேர்ந்தால் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். அப்பொழுது எம்மாலும் உதவி செய்ய முடியாத நிலை ஏற்படும். எனவே உங்கள் பிள்ளைகளை எந்த வகுப்பினராயினும் பாடசாலைக்குச் சீருடையுடன் அனுப்பி வைப்பதே மிக பாதுகாப்பானது என்பதையும் அறியத்தருகின்றோம்.

எமது தேசத்தின் எதிர்கால நிர்ணயித்தினை கருத்திற் கொண்டு உறுதியுடன் சரிவர நிறைவேற்றுவோம்; என்பதை உறுதி செய்கின்றோம்; எம்முடன் இணைவதன் மூலம் எமது உழைப்புக்கு உரம், ஊட்டுங்கள்.- என்று கூறப்பட்டுள்ளது.

## இளைஞர் பலி

யாழ்ப்பாணம், செப் 5

அளவெட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

வித்தி என அழைக்கப்படும் வித்தியாசரன் (வயது 17) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (ஓ-10)

## தபால்கள் தேக்கம்

வவுனியாவுக்கு அப்பாலான —தென்பகுதிக்கான தபால்கள் மற்றும் வெளிநாட்டுத் தபால்கள் யாழ் தபாலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

இருநூறுக்கும் அதிகமான தபால் பொதிகள் இங்கு முடங்கிக் கிடக்கின்றன.

போக்குவரத்துச் சிரமங்களே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-10)

## கொழும்பு நகரம் நேற்று வழமைக்குத் திரும்பியது

ஒருவார இடைவெளிக்குப் பின் நேற்றுக் கொழும்பு நகரம் வழமைக்குத் திரும்பியது;

ஜே. வி. பியின் வேலை நிறுத்த அழைப்பை அடுத்து கடந்த ஒருவார காலமாகக் கொழும்பு நகரம் ஸ்தம்பித நிலையை அடைந்திருந்தது;

நேற்று அரச மற்றும் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டன;

அரச ஊழியர்கள் அலுவலகங்களுக்குச் சென்று கடமையில் ஈடுபட்டனர்: நகரம் சுறுசுறுப்பாகக் காணப்பட்டது: (ஓ-8)

## ஆஸ்பத்திரி வேலைநிறுத்தம் தொடரும் என அறிவிப்பு

கொழும்பு, செப் 5

ஆஸ்பத்திரி ஊழியர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்யவேண்டும் என்று சட்டன் பெரமுன (நடவடிக்கை அமைப்பு) உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக பெரமுன விடுத்த சுற்று நிருபம் ஒன்றில் மூன்று ஆஸ்பத்திரிகளின் ஊழியர்கள் மட்டும் வேலைக்குச் செல்லலாம் என்று தெரிவித்து உள்ளது;

அவையாவன;

குழந்தைகளுக்கான லேடி ரிட்ஜ்வே ஆஸ்பத்திரி, பெண்களுக்கான காஸல் வீதியிலுள்ள டீசொய்சா பிரசவ ஆஸ்பத்திரி, அங்கொட மனநோயாளர் ஆஸ்பத்திரி;

நிபந்தனை எதுவுமின்றி கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை ஆஸ்பத்திரி ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடரும் என்று சட்டன் பெரமுன தனது சுற்றுநிருபத்தில் தெரிவித்துள்ளது;

இதனிடையில் பயமுறுத்தல் காரணமாக டாக்டர்களும் தாதிகளும் கடமைக்குச் செல்ல தயங்குவதாக அறிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## 2 வருட சம்பளக் கடன்: யாழ் கல்வி திணைக்களத்தில் 170பேருக்கு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்: 5

யாழ் - கல்வித் திணைக்களத்தில் முதல்கட்டமாக 170 பேருக்கு இரண்டு வருட சம்பளக்கடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முதகட்டமாக இக்கடனை வழங்க யாழ் கல்வித் திணைக்களத்திற்கு 10 கோடி ரூபா கிடைத்துள்ளது:

யாழ் - கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த 20 பேருக்கும், யாழ் - கோட்டத்தைச் சேர்ந்த 30 பேருக்கும், மருதமடம் கோட்டத்தைச் சேர்ந்த 30 பேருக்கும், பருத்தித்துறை கோட்டத்தைச் சேர்ந்த 45 பேருக்கும்: வேலணை கோட்டத்தைச் சேர்ந்த 15 பேருக்கும், பண்டத்தரிப்புகோட்டத்தைச் சேர்ந்த 30 பேருக்கும் முதல்கட்டமாக இக்கடன் வழங்கப்படவிருக்கிறது.

யாழ் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த 15 பேருக்கு ஏற்கனவே இக்கடன் வழங்கப்பட்டுள்ளது தெரிந்ததே; (ஓ-3)

### மனித உரிமை மீறல் பற்றிய விசாரணை:

## சர்வதேச அமைப்புகளுக்கு அரசு அனுமதி மறுப்பு!

கொழும்பு, செப். 5

இலங்கையில் மனித உரிமை மீறல் இடம்பெறுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு சர்வதேச அமைப்புக்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

— இப்படி இலங்கை அரசு அறிவித்துள்ளது;

நாடாளுமன்ற எதிர்க்கட்சிக் குழு ஒன்று நேற்று முன்தினம் ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்து மனித உரிமைப் பாதுகாப்புப் பற்றி பேச்சுக்களை நடத்தியது;

அப்போதே அரச தரப்பில் மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டது: (ஓ எ-த)

## எதிர்க்கட்சிகள்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
யின் அழைப்பிதழ்கள், அவரது வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனால் கட்சித் தலைவர்களிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டன;

சனிக்கிழமை மாலையும், ஞாயிறு காலையும் திரு பிரட்மன் அழைப்பிதழ்களைக் கையளிக்கும் பணியில் ஈடுபட்டார்;

மாநாடு 13 ஆம் திகதி காலை 9-30 மணியளவில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அழைப்பிதழில் கூறப்பட்டிருக்கிறது:

ஒவ்வொரு அரசியல் கட்சியின் சார்பிலும் இரண்டு பிரதிநிதிகள் கலந்து கொள்ளலாம் என்று அழைப்பிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''ஐந்து எதிர்க் கட்சிகளின் சார்பில் எனக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையிலேயே இம் மாநாட்டை நான் கூட்டுகிறேன்''— இப்படி ஜனாதிபதி அழைப்பிதழில் தெரிவித்திருக்கிறார்.

மாநாட்டின் முதல் நாள் கூட்டத்தில் மாநாட்டு நடைமுறைகள் குறித்து ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது; (ஓ-எ)

## மகோற்சவம் பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், செப் 5

வல்லை நெடிய காட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் பின்போடப்பட்டுள்ளது;

மேற்படி உற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்தது;

இங்கு நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்த முடிவை எடுத்துள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்: (த)

## காட்டுவைரவர் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், செப் 5

உரும்பராய் காட்டுவைரவர்கோவில் சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது: (க)

## காபந்து..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
வைத்த கடிதம் ஒன்றிலேயே இந்த நிபந்தனை பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது;

அனைத்துக்கட்சி மாநாடு சம்பந்தமாக ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஆராய்ந்த பின்னரே எதிர்க்கட்சிகள் இக்கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளன; (க-எ)

## இந்து மகளிர் மாணவியர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், செப் 5

டிசம்பர் மாதம் ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சைக்கு மீண்டும் தோற்றவுள்ள யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவிகள் உடனடியாக கல்லூரிக்கு சமுகம் கொடுத்து தங்களது விண்ணப்பங்களில் கையொப்பமிடுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (ஓ-10)

## ஜெயலலிதா..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
சிரேஷ்ட இணைப்பொதுச் செயலாளர் ஆக்கி தனக்கு அடுத்த இரண்டாவது இடத்தையும் அவருக்கு வழங்க இருக்கிறார் செல்வி ஜெயலலிதா:

கடந்த சனிக்கிழமை செல்வி ஜெயலலிதா இந்த மாற்றத்தை அறிக்கையொன்றின்மூலம் தெரிவித்தார்.

அ.தி.மு.க வட்டாரங்களை, ஜெயலலிதாவின் திடீர் நடவடிக்கை ஆச்சரியத்துக்குள்ளாகி இருக்கிறது;

ஜெயலலிதாவின் அறிக்கை வெளியாகும் வரை இந்த மாற்றம் பற்றி கட்சியின் உயர் மட்டத்தலைவர்கள் எவருக்குமே தெரிந்திருக்கவில்லை:

சிரேஷ்ட இணைப் பொதுச் செயலாளர் பதவியை ஏற்றுக் கொண்ட திரு. எஸ் டி: சோமசுந்தரம், செல்வி ஜெயலலிதாவை அவரது போயஸ் கார்டன் இல்லத்தில் சந்தித்து தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் திரு. சோமசுந்தரம்,

''திரு: வீரப்பன் எப்போதுமே எனக்கு ஜூனியராகத்தான் இருந்து வந்தார்; எம்: ஜி. ஆர்: அமைச்சரவையிலும் எனக்கு அவர் ஜூனியர்தான்; எனது கடும் உழைப்பை செல்வி ஜெயலலிதா அங்கீகரித்து சன்மானமும் தந்து விட்டார்'' என்று சொன்னார்.

இந்த மாற்றத்தை ஜெயலலிதா அறிவித்த சமயம் புதுக்கோட்டைக்குச் சென்றிருந்த திரு: வீரப்பன் உடனடியாக அடுத்த நாள் சென்னை திரும்பினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் ''பொதுச் செயலாளர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி தம் விருப்பத்தின்படி நடந்திருக்கிறார்; இதுபற்றி நான் சொல்வதற்கு ஒன்றுமே இல்லை''— என்று வீரப்பன் தெரிவித்தார்;

வீரப்பன் அ. தி. மு. க: வில் மீண்டும் சேர்ந்து கொண்ட போது ஜெயலலிதா ''கட்சியின் கொள்கை பற்றிய அறிக்கைகளை நான் வெளியிடுவேன். அல்லது வீரப்பன் தான் வெளியிடுவார்''— என்று பகிரங்கமாகக் கூறியிருந்தது தெரிந்ததே;

## யாழ். பல்கலை புதிய பதிவாளர்

யாழ் பல்கலைக்கழகத்துக்கான புதிய பதிவாளர் விரைவில் நியமிக்கப்பட இருக்கிறார்;

புதிய பதிவாளரைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கொழும்பில் பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்ற சமயம் எட்டுப்பேர் கலந்து கொண்டனர்:

தெரிவு செய்யப்பட்டவருக்கான நியமனம் பல்கலைக்கழக தெரிவுக்குழுக் கூட்டத்தின் பின் வழங்கப்படும் என அறிய வந்தது; (ஓ 8)

## இலட்சார்ச்சனை

சாவகச்சேரி வாரிவனநாதர் ஆலய வருடாந்த இலட்சார்ச்சனை ஆகஸ்ட் இருபத்தேழாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது;

தொடர்ந்து பத்துதினங்கள் நடைபெறும் இவ் அர்ச்சனை இன்று ஐந்தாம் திகதிபூர்த்தியடையும்; (க-117)

## நாடாளுமன்ற ஜனநாயகம் உடன் மீளப் பெறவேண்டும்

### யோகசங்கரி எம். பி. அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 5

நாடாளுமன்றம் இழந்த தனது ஜனநாயக உரிமையை உடனடியாக மீளப்பெறவேண்டும்; தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும்; நாட்டின் சீரழிவைத் தடுக்க இதுவே உடனடி வழிவகையாக இருக்கும் என நாம் நம்புகின்றோம்:

ஈ. பி. ஆர். எல்: எவ் வின் யாழ்-மாவட்ட எம். பி திரு: வி. கே. யோகசங்கரி விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஈ. பி ஆர். எல்: எவ்வைப் பொறுத்தவரை தமிழ் பேசும் மக்களது ஒட்டு மொத்தமான பிரச்சினைகளுடன், வடக்கு-கிழக்கு பகுதிகளைத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அமைதி, சமாதானம் நிலவ வேண்டும் என்பதில் ஆர்வமாக உள்ளோம்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தை சீர்குலைத்து, நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கட்டுப்படுத்தும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டமையே இன்றைய பூதாகார பிரச்சனைகளுக்கும், நாட்டின் சீரழிவிற்கும் காரணம் என நாம் நம்புகின்றோம்.

இது மட்டுமன்றி, தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு, அவர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய அந்தஸ்து, அதிகாரங்கள் முற்றாக வழங்க மறுக்கப்படுவதும் தற்போதைய சீரழிவு நிலைக்கு காரணமாகும்:

இந்த நாட்டில் அமைதி, சமாதானம், ஒற்றுமை பேணப்படவேண்டுமானால், வடக்கு கிழக்கில் அமைதி காத்துவரும் இந்தியப்படை வெளியேற வேண்டும் என இந்த அரசு கோரப்பட்டுவருவதை நாம் அறிவோம்: இது தொடர்பாக எமது நிலைப்பாடானது, வடக்கு-கிழக்கு மக்களது அதிகாரப் பரவலாக்கலுடன், அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தவதிலுமே தங்கியுள்ளது:

தமிழ்பேசும் மக்களுக்கு அதிகாரப்பரவலாக்கத்துடன், அவர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை இந்திய அமைதிப் படை வடக்கு-கிழக்கில் இருந்து வெளியேறுவதை எம்மால் அனுமதிக்க முடியாது;

எனவே இந்திய அமைதி காக்கும்படை வெளியேறுதல் விரைவுபடுத்தப்பட வேண்டுமானால், அது, தமிழ்பேசும் மக்களது அதிகாரப் பரவலாக்கலையும், அவர்களது பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்த அரசு எவ்வளவு விரைவாக நடவடிக்கை எடுக்கிறதோ, அதில்தான் தங்கியுள்ளது என்பதை நாம் வலியுறுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்;

### தென் ஆபிரிக்காவில்

## நிறவேற்றுமைக்கு எதிரான போராட்டம் தொடரும்!

### பிஷப் டுட்டு அறிவிப்பு

கேப்டவுன்; செப்; 4

பொதுத்தேர்தல் முடிந்த பின்னர் நிறவேற்றுமைக்கு எதிராக கறுப்புஇன மக்களின் போராட்டம் தொடரும் என்று பிஷப் டெஸ்மண்ட் டுட்டு அறிவித்திருக்கிறார்;

வருகிற புதன்கிழமை வெள்ளை நிற வாக்காளர்கள் மட்டும் பங்குபற்றும் பொதுத் தேர்தல் தென் ஆபிரிக்காவில் நடைபெறுகிறதுதெரிந்ததே:

இதேவேளை-இத்தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி வெள்ளை நிற வாக்காளர்களை பிஷப் டுட்டு கேட்டுள்ளார்; (எ)

## இடம் பெயர்ந்தோர் மீள வருகின்றனர்

பருத்தித்துறை, செப்; 5

வடமராட்சியில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து அங்கிருந்து இடம்பெயர்ந்து சென்றவர்கள் மீளவும் தமது வீடுகளுக்கு வரத் தொடங்கியுள்ளனர்;

அங்கு பதற்றம் முற்றாக நீங்கவில்லை ஆயினும், தமது உடைமைகள் திருட்டுப் போவது அறிந்தே அவர்கள் திரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-118)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும் நன்றி நவிலலும்



அன்னையின் மடியில்:
25 - 06 - 1919

ஆண்டவன் அடியில்:
06 . 08 . 1989

### அமரர் கந்தையா தியாகராஜா

[''முன்னாள் கோணேஸ்வரி கபே உரிமையாளர்'' யாழ்ப்பாணம்]

ஞான தீபமாய் விளங்கி இன்று எம் இதயங்களின் அன்பான தீபமாய் ஆகிவிட்ட எமது குடும்பத்தின் நாயகனே! எமது கண்ணீர்ப் பூக்களை தங்கள் காலடிகளில் சமர்ப்பித்துத் தங்களுக்கு எமது 31ஆம். நாள் நினைவு அஞ்சலியைச் செலுத்துகின்றோம்;

05-09-1989 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

17, ஆடியபாதம் றோட், கல்வியங்காடு, நல்லூர்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி

(1925)

## மரண அறிவித்தல்

திரு.
**சந்தியாப்பிள்ளை மரியாம்பிள்ளை**
[கென்னடி வாச் வேக்ஸ் உரிமையாளர்]
(யாழ்ப்பாணம்)

திரு, சந்தியாப்பிள்ளை மரியாம்பிள்ளை (கென்னடி வாச் வேக்ஸ் உரிமையாளர்) 03-09-1989 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்;

இவர் காலஞ்சென்ற அ. சந்தியாப்பிள்ளை, திருமதி திரேசம்மா சந்தியாப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், திருமதி லூர்துமலரின் அன்புக் கணவரும், மரியகொறற்றி (Dynamic Engineering Ltd.), மரீனா கிறிஸ்ரீனா, ஜோசப் கென்னடி, மரியறெஜீனா (யாழ். பல்கலைக்கழகம்), ஜோன் கென்னடி ஆகியோரின் அன்புத் தந்தையும், அக்கினேசம்மா, Guy டி பொன்சேகா, பிறிஜிற், மரியதாஸ், ஜோசப் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்;

இவரது பூதவுடல் இன்று 05-09-1989 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, பின்னர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்;

இல, 40, கதீற்றல் வீதி,
யாழ்ப்பாணம்;

தகவல்:
ச. மரியதாஸ்
[2055]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 898/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05-09-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org